Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 28 | வெள்ளிக்கிழமை Friday | 28.11.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## வடகிழக்கு பருவமழை மீட்பு நடவடிக்கைகளுக்கு

# அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரை



சென்னை: வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்பு நடவடிக்கைகளுக்கு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கினார். முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போது நிலவிவரும் வானிலை நிலவரம் குறித்தும், பேரிடர் மேலாண்மைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னெடுப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையக் கூட்டமும் நடைபெற்றது.

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கையின் தெற்குப் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும், இதன் காரணமாக தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்கள் மற்றும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், ராணிப்பேட்டை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களுடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு ஆய்வு கூட்டமும், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் மூன்று கூட்டங்களும் நடைபெற்றன.

இப்பேரிடரை எதிர்கொள்ள முதலமைச்சர் பல்வேறு துறை உயர் அலுவலர்களும் மற்றும் மாவட்ட நிருவாகமும் மேற்கொள்ள வேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கினார். நிகழ்நேர பேரிடர் கண்காணிப்பிற்காக பொருத்தப்பட்ட தானியங்கி வானிலை கருவிகள், புயல் சீற்ற மாதிரி, மாநகராட்சிகளுக்கான வெப்ப அலை செயல்பாட்டுத் திட்டம், சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு திட்டம், தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமையின் ஒருங்கிணைந்த வெள்ள கண்காணிப்பு மையம், தரம் மேம்படுத்தப்பட்ட மாநில அவசர கால செயல்பாட்டு மையம், பொதுமக்களுக்கான டி.என்.அலர்ட் (TN Alert) செயலி மற்றும் அரசு அலுவலர்களுக்கான டி.என். ஸ்மார்ட் 2.0 (TN Smart 2.0) இணையதளம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை திட்டம் 2025-க்கு தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

# தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையன் நியமனம்: தலைவர் விஜய் அறிவிப்பு




சென்னை: தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையன் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களோடு பயணித்தவர், தாம் சார்ந்திருந்த கட்சியின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர், அனைவரிடத்திலும் எளிமையோடும் அன்போடும் பண்போடும் பழகி, நன்மதிப்பைப் பெற்றவர் மூத்த அரசியல் தலைவர், முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்.

இவர் இந்தக் குழுவை வழிநடத்தி கட்சியின் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்க எனக்கு உறுதுணையாகச் செயல்படுவார். மேலும் கூடுதலாக ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்புச் செயலாளராகவும் நியமிக்கப்படுகிறார்.


என்னோடும், கட்சியின் பொதுச் செயலாளர் என் . ஆனந்தோடும் கலந்தாலோசித்து கட்சிப் பணிகளை மேற்கண்ட இம்மாவட்டங்களில் மேற்கொள்வார்.

மேலும், அவருடன் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்தியபாமா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் வெங்கடாசலம், முத்துக்கிஷ்ணன் மற்றும் பிற புதிய உறுப்பினர்களையும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கட்சியின் நிர்வாகிகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

தவெக தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்த கே.ஏ. செங்கோட்டையன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: "அதிமுகவில் எம்ஜிஆரால் நான் அடையாளம் காட்டப்பட்டவன். அப்போது இந்த கட்சி 100 நாட்கள் கூட நீடிக்காது என்று எதிர்கட்சிகள் சொன்னர்கள். ஆனால் அண்ணாவால் பாராட்டப்பட்டவர் எம்ஜிஆர். அந்த தலைவர் மறைந்தபோது அதிமுக இரண்டாக உடைகிற சூழல் எழுந்தபோது ஜெயலலிதாவின் வழியில் நான் என் அரசியல் பயணத்தை மேற்கொண்டேட். ஜெயலலிதா மறைவுக்குப்பிறகுகாலச்சூழல் காரணமாக மூன்று கூறுகளாக அதிமுக பிரிந்தது. எல்லாரும் ஒன்றினைய வேண்டும் என்றுதான் கருத்துகளை வெளிப்படுத்தினோம். ஆகவே இன்றைய சூழலில் நான் சொல்ல விரும்புவது, 'நானென்று ஒருவன் நினைத்தான், ஆண்டவன் தானென்று பார்த்துக் கொள்வார்".

முதலில் என்னுடைய பொறுப்புகளை எடுத்தார்கள். தேவர் ஜெயந்திக்கு சென்று திரும்பியபிறகு என்னுடைய உறுப்பினர் பதவியை கூட எடுத்துக் கொண்டனர். 50 ஆண்டுகாலம் இந்த அரசியல் பயணத்தில் நான் சந்தித்த ஏற்றத் தாழ்வுகளுக்கு பரிசுதான் இது. மகேஷ் என்பவரின் தந்தையின் இறப்புக்கு நான் சென்றதால் அவருடைய அடிப்படை உறுப்பினர் பதவியையும் பறித்துள்ளனர். இதனை கருத்திக் கொண்டுதான் தெளிவான முடிவு எடுத்து நேற்று என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழகவெற்றிக் கழகத்தில் இணைந்திருக்கிறேன். இங்கு ஏன் இணைய வேண்டும் என்றகேள்வி பலருக்கும் எழக்கூடும். இன்று திமுக வேறு, அதிமுக வேறு என்பதல்ல. இரண்டும் ஒன்றாக இணைந்துதான் பயணத்தை மேற்கொண்டு வருகின்றன என்பதை நாடறியும்.

# உருவானது டிட்வா புயல்; 4 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான ரெட் அலெர்ட்



சென்னை: வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 'டிட்வா' புயலாக வலுப்பெற்றது. புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 4 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான ரெட் அலெர்ட் விடுக்கப்பட்டு உள்ளது.

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் டிட்வா புயல் இன்று உருவாகி உள்ளது. இதுபற்றி வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை – இந்திய பெருங்கடல் பகுதிகளில் நேற்று (26-11-2025) நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று நள்ளிரவு காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோர பகுதிகளில் வலுப்பெற்று, இன்று (27-11-2025) காலை 5.30 மணி அளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெற்று அதே பகுதிகளில், இலங்கை அம்பாந்தோட்டையிலிருந்து, கிழக்கு-வடகிழக்கே சுமார் 130 கிலோ மீட்டர் தொலைவிலும், இலங்கை மட்டக்கிளப்பிலிருந்துதெற்கு--தென்கிழக்கே 120 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுவையிலிருந்து தெற்கு-தென்கிழக்கே 640 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து தெற்கு-தென்கிழக்கே 730 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது மேலும் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 3 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் புயலாக மேலும் வலுப்பெறக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் இன்று புயல் உருவாகி உள்ளது. அதற்கு டிட்வா என பெயரிடப்பட்டு உள்ளது. அடுத்த 48 மணிநேரத்தில் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் வருகிற 30-ந்தேதி அது கையை கடக்கும்.

இது குறி சென்னைக்கு தெற்கு தென்கிழக்கே தற்போது 700 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ள இந்த புயல், வட தமிழகம், புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளில் கரையை கடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், பலத்த தரை காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

த்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: வங்கக்கடலில் இலங்கை அருகே நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் மணிக்கு 17 கி.மீ. வேகத்தில் வடமேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது. தற்போது சென்னைக்கு தென்கிழக்கே 730 கி.மீ. தொலைவில் நிலைகொண்டுள்ளது.

தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 'டிட்வா' புயலாக உருவானது. அது மேலும் தீவிரமடைந்து, அடுத்த 48 மணி நேரத்தில், ஆந்திரப் பிரதேச கடற்கரையை நோக்கி நகரும்.

மிக கனமழை (ஆரஞ்சு அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* ராமநாதபுரம்,
* சிவகங்கை,
* திருச்சி,
அரியலூர்
* மயிலாடுதுறை

நாளை (நவ.,28) கனமழை (மஞ்சள் அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* தூத்துக்குடி
* விருதுநகர்
* மதுரை
* பெரம்பலூர்
* கடலூர்

நாளை மறுநாள் (நவ.,29) அதி கனமழை (ரெட் அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* நாகப்பட்டினம்
* திருவாரூர்
* மயிலாடுதுறை
* கடலூர்
* விழுப்புரம்
* செங்கல்பட்டு

நாளை மறுநாள் (நவ.,29) மிக கனமழை (ஆரஞ்சு அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* தஞ்சை
* அரியலூர்
* பெரம்பலூர்
* கள்ளக்குறிச்சி
* திருவண்ணாமலை
* வேலூர்
* ராணிப்பேட்டை
* காஞ்சிபுரம்
* சென்னை
* திருவள்ளூர்

செய்திகள் உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## நவம்பர் 26 அரசியலமைப்புச் சட்ட நாள்

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி சார்பில் அம்பேத்கர் சிலை முன்பு உறுதியேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அரசியலமைப்பு சட்ட நாள் முன்னிட்டு மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி செயலாளர் பாக்கம் பேரறிவாளன் அவர்களின் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் நகரத்தில் அமைந்த புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து அவரது திருவுருவப்படத்திற்கு முன்பாக அம்பேத்கர் அவர்கள் கண்ட கனவை நனைவாக்கும்வகையில் பிறப்பின் அடிப்படையிலான உயர்வு தாழ்வு என்னும் சனாதன பாகுபாடுகள் இல்லாத ஒரு புதிய சனநாயக கட்டமைத்திடவும் உளப்பூர்வமாகஉறுதிஏற்கிறோம் என்று உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்

இந்நிகழ்வில் மாநில மாவட்ட நிர்வாகிகள் மா.அப்பாதுரை சரவணன் செல்வம் தலித்எழில்மலை மகாதேவன் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கதிர்வனன் முகிலன் தயாநிதி பன்னீர்செல்வம் கிட்டு பிரபாகரன் சமத்துவன் வழக்கறிஞர் வினோத் முருகவேல் சிறுத்தை சத்யாசாரநாத்கலையரசன் சாம்ராஜ் துளசி மதன்ராம்கமல்வெங்கட் சுரேஷ் இமானுவேல் முரளி ஜெயராஜ் நெல்சன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



# வேப்பூர் அருகே உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கட்சியினர் கொண்டாட்டம்

திமுக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான மாண்புமிகு.உதயநிதிஸ்டாலின் அவர்களின் 49ஆவது பிறந்தநாளைமுன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சருமான சி.வெ. கணேசன் உத்தரவுப்படி நல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான பாவாடை கோவிந்தசாமி வழிகாட்டுதல்படி சேப்பாக்கம் ஊராட்சியில் கிளைச் செயலாளரும் முன்னாள் கவுன்சிலருமானந.ஏழுமலைதலைமையில் பட்டாசு வெடித்து உற்சாகமாக கொண்டாடி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

அப்போது, ஒன்றிய பொருளாளர்வெங்கடாசலம், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்தனசேகரன், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் மாரிமுத்து, ஒன்றிய அயலக அணி துணை அமைப்பாளர் ஞானசேகரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் சாக்ரடீஸ், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் உதயநிதி மற்றும் கிளை கழக நிர்வாகிகள் எஸ்ஆர்ஜி. ஆனந்தன் இருசமுத்து, அண்ணாமலை,பழனிவேல், பாலசுப்பிரமணியம் மற்றும் திரளான திமுக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.



# அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக்கழகத்தின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர். Bsc., அவர்களின் ஆணைக்கிணங்க. அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி. கோகுலகண்ணன் அவர்கள் தலைமையில் பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் உள்ள ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது இதில் கழகத்தின் நிர்வாகிகள் மாவட்ட கவுன்சிலர் வசந்தா கோகுலகண்ணன் ஒன்றிய குழு உறுப்பினர் ஜா.பார்த்தசாரதி மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கலியுக கண்ணதாசன் மாவட்ட பிரதிநிதிகள் பாபுராயன் பேட்டை கருணாகரன் ரத்தினவேல் ஒன்றிய அவைத் தலைவர் , ஜியாவுதீன் தகவல் தொழில்நுட்ப மாவட்ட அமைப்பாளர், வி.டி.எழிலரசன் அச்சிறுப்பாக்கம் பேரூர் செயலாளர் பொறுப்பு குழு உறுப்பினர் வெங்கடேசன்

சிறுபேர்பாண்டி ஊராட்சி மன்ற தலைவர்,சுதாகர் இளைஞர் அணி நிர்வாகிகள் துரைகணேஷ் ஜெயக்குமார் பெரும்பேர்கண்டிகை ஊராட்சி கிளைக்கழகசெயலாளர்கள் ராஜேந்திரன்,

ரகுராமன் தரு, லட்சுமணன் செந்தில் ஜெகன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கழக பேரூர் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்





## துணை முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்த நாள் விழா

# அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு அறுசுவை உணவு வழங்கும் விழா

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்,எல்,ஏ அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக இளைஞரணி செயலாளர் தமிழக துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளைமுன்னிட்டு அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் பெரும்பேர் கண்டிகை ஊராட்சியில் ஆதரவற்றோர் முதியோர்களுக்கு முதற்கட்டமாக காலை அறுசுவை விருந்து வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சியை அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் பா பாண்டியன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார் இதில் கழக நிர்வாகிகள் ரத்தினவேலு ஜியாவுதின் பார்த்தசாரதி சங்கர் குருக்கள் ராஜசேகர் சரவணன் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் க.பிரகாஷ் தனஞ்செழியன் செல்வ சுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



கடலூர் மாவட்டம் வேப்பூரில் திமுக கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் மாண்புமிகு சி.வெ. கணேசன் அவர்களின் உத்தரவுப்படி மாநில இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு வேப்பூர் முன்னால் ஒன்றிய கவுன்சிலர் சோலைராஜன் ஏற்பாட்டில் துப்புரவு பணியாளர்களுக்கு சேலை லுங்கி சட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. உடன் முன்னால் மாவட்ட கவுன்சிலர் நகர் சி. சக்திவினாயகம், வேப்பூர் ஊராட்சி செயலர் தங்க. வெங்கடேசன், மக்கள் நல பணியாளர் சிலம்பரசன் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு

# கோவை வடக்கு மாவட்டம், துடியலூர் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பாக பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கினர்

கோவை வடக்கு மாவட்டம், துடியலூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பாக தி மு க இளைஞரணி செயலாளரும்,தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளைமுன்னிட்டு கோவை மாநகராட்சி 2 வது வார்டுக்கு உட்பட்ட துடியலூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் 300க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கினர்.

திராவிட முன்னேற்ற கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளை தி மு க தொண்டர்கள் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக கோவை வடக்கு மாவட்டம், துடியலூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பாக கோவை மாநகராட்சி 2 வது வார்டிற்கு உட்பட்ட துடியலூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் 300க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் பேனா, பென்சில், ரப்பர், சார்ப்னர், ஸ்கேல், நோட்புக் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி பி எஸ் நிஷாந்த் என்கிற நிதியரசு ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, தலைமை செயற்குழு உறுப்பினர் டி பி சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். பகுதி செயலாளர் அருள்குமார் கட்சிக் கொடியினை ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் 2 வது வார்டு மாமன்ற உறுப்பினர் புஷ்பமணி அருள்குமார், மாவட்ட பகுதி துணை அமைப்பாளர் சண்முகசுந்தரம்,பிரதிநிதி தன்ராஜ், சதீஷ் குமார், சன் சோமு, வட்ட செயலாளர்கள் சண்முகம், சுந்தரம், தமிழ்நிதி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுபாஷ்,பாரி,தீனா,சேகர், பரணி ஆறுச்சாமி, ஆறுமுகம், குமரவேல், சசிக்குமார், ராமசாமி, ஐ டி விங் சுப்பிரமணி,பன்னீர் செல்வம், பழனிசாமி, ஆறுச்சாமி, தீன் பாய், மதன்குமார், சி டி சி சுப்பிரமணியன் , சுகுமார், கோவிந்தராஜ், குமார், மோகன், சீனிவாசன், நாராயணன், வன்னியர் சங்க மாவட்ட துணை செயலாளர் யு வி எஸ் செல்வகுமார், டி ஆர் ராஜேந்திரன், டி என் சி பழனியப்பன்,திலக்என்கிற பழனிசாமி, மகளிர் அணி ரேவதி, தமிழ்செல்வி, ஜீவ ரத்தினம், அருக்காணி, லட்சுமி, சந்தி, சிவாநந்தினி, லட்சுமி பாலுசாமி,தனபாக்கியம், மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினர்.




# வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959




மதுரை திருப்பரங்குன்றம் திருக்கார்த்திகை திருவிழாவைமுன்னிட்டுஇத்திருக்கோயில்அறங்காவலர் குழுத் தலைவர் ப.சத்யபிரியா பாலாஜி அவர்களால் உபயமாக இன்று திருக்கோவிலுக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்திருக்கோயில் கொடிமரத்துக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

# உதகை அருகே ஆட்கொல்லிப் புலியைப் பிடிக்க 5 கூண்டுகள் அமைப்பு



உதகை: பெண்ணை அடித்துக் கொன்ற T37 என்ற புலியைப் பிடிக்க ஒரு பிரமாண்ட கூண்டு உள்பட 5 கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளது. புலிக்கு 12 வயது இருக்கலாம் என மதிப்பீடு. புலியை கண்காணிக்கும் பணியில் 40க்கும் மேற்பட்ட வனத்துறையினர் களத்தில் உள்ளனர்.



தென்காசி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழையின் தாக்கம் குறைந்ததை தொடர்ந்து ஆறு தினங்களுக்கு பிறகு குற்றாலம் பிரதான அருவியில் ஐயப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தற்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் ஐயப்ப பக்தர்கள் சுற்றுலா பயணிகள் வியாபாரிகள் மகிழ்ச்சி.

## பு.கிள்ளனூர் கிராமத்தில் உள்ள ஆதிகேசவ பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையை அடுத்த பு.கிள்ளனூர் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமையான அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஆதிகேசவ பெருமாள் கோவில் இந்து அறநிலையத்துறையின் சார்பில் புதுப்பிக்கப்பட்டது இந்த நிலையில் கோவில் கும்பாபிஷேகம் இன்று 27ஆம் தேதி வியாழக்கிழமை காலி நடைபெற்றது இதையொட்டி 26ஆம் தேதி புதன்கிழமை மாலை கோவில்அருகில்அமைக்கப்பட்டிருந்த யாகசாலையில் முதல் கால யாகசாலை நடைபெற்றது தொடர்ந்து விக்னேஸ்வர பூஜை அங்கு ரார் பணம் வாஸ்து சாந்தி மகா சாந்தி பூர்ணாகுதி முட்பட சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட நிலையில் இன்று வேத மந்திரங்கள் முழங்க மங்கள வாத்தியங்களுடன் யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடு நடைபெற்றது அப்பொழுது யாகசாலையில் வைத்து சிறப்பு பூஜை செய்யப்பட்ட கலசங்களை பட்டாச்சாரியார்கள் ஊர்வலமாக எடுத்து கோவிலை வலம் வந்துமகாகும்பாபிஷேகம் நடத்தி வைத்தனர் அப்பொழுது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என கோஷமிட்டு ஆதி கேசவ பெருமாளை வணங்கினர்....



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டராங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அன்பழகன் அவர்கள் உடன் உள்ளார்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (26.11.2025) அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடு, ஆவின் பால்பண்ணை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் திருவுருவச்சிலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், பொதுப்பணித்துறை அமைச்சர் தஎ.வ. வேலு, மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோதங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, பால்வளத் தந்தை எஸ்.கே.பரமசிவன் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஹாங்காங் அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து பலி எண்ணிக்கை 55 ஆக உயர்வு; 300 பேர் மாயம்

விக்டோரியா: ஹாங்காங் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் தீப்பற்றியதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 300 பேர் காணாமல்போயுள்ளனர். இந்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

நம் அண்டை நாடான சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள தீவு நாடான ஹாங்காங்கின், தை போ மாகாணத்தில் 'வாங் புக் கோர்ட்' என்ற அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் உள்ளது. இங்கு, தலா 35 மாடிகளுடன் வரிசையாக எட்டு கட்டடங்கள் உள்ளன. மொத்தம் உள்ள 2,000 வீடுகளில் 4,800 பேர் வசித்து வருகின்றனர். இந்த குடியிருப்பு வளாகத்தில் புதுப்பிக்கும் பணிகளுக்காக மூங்கில் சாரங்கள் மற்றும் வலைகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு கட்டடத்தில் இருந்த மூங்கில் சாரத்தில் நேற்று மதியம் திடீரென தீப்பற்றியது. காற்றின் வேகத்தால் அடுத்தடுத்த கட்டடங்களுக்கும் தீ மளமளவென பரவியது.



ஏழு கட்டடங்களில் தீ பரவி கொழுந்து விட்டு எரிந்ததால், அந்தப் பகுதியே சிவப்புநிறமாக காட்சியளித்ததுடன் புகை மண்டலமாக மாறியது. தகவல் அறிந்து 128 தீயணைப்பு வாகனங்களில், 767 தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து கட்டுக்கடங்காமல் எரிந்த தீயை பல மணி நேரம் போராடி அணைத்தனர். இந்த தீ விபத்தில், தீயணைப்பு படை வீரர் உட்பட 55 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் முதியோர் என தெரியவந்துள்ளது. மேலும் 300 பேர் காணாமல்போயுள்ளனர். பலர் பலத்த காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

## சிவகங்கை வழியாக முதன் முறையாக கார்த்திகை தீபத்திற்கு சிறப்பு ரெயில்

### தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது




சிவகங்கை மாவட்டம் கார்த்திகை தீப திருநாள் விழாவை முன்னிட்டு தெற்கு ரயில்வேயானது சிவகங்கை வழியாக திருநெல்வேலி முதல் திருவண்ணாமலை வரை மற்றும் திருவண்ணாமலை முதல் திருநெல்வேலி வரை இயங்கும் சிறப்பு ரயில் சேவையினை முதல்முறையாக அறிவித்துள்ளது.

அதன்படி வண்டி எண் : 06075 திருநெல்வேலியில் 03.12.2025–ஆம் தேதி புதன்கிழமை இரவு 9:30 மணிக்கு புறப்பட்டு சிவகங்கைக்கு இரவு 12:43 மணிக்கு வந்து சேர்ந்த பின்னர் 12:45 மணிக்கு திருவண்ணாமலை நோக்கி புறப்பட்டுச் செல்லும்.

மேலும் அதே ரயிலானது வண்டி எண் : 06076–ல் திருவண்ணாமலையில் 04.12.2025–ஆம் தேதி வியாழக்கிழமை இரவு 7:55 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 2:33 மணிக்கு சிவகங்கை வந்து 2:35 மணிக்கு திருநெல்வேலி நோக்கி புறப்பட்டு செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குறிப்பிட்ட சிறப்பு ரயிலானது கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, விருத்தாசலம், விழுப்புரம் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தி பயன்பெறுமாறு தெற்கு ரயில்வே சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த ரயிலுக்கான முன்பதிவு விரைவில் தொடங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு வழக்கறிஞர் அணி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு இனிப்புவழங்கினர். இதில் மாவட்டகவுன்சிலர் அரங்கஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், அரசு வழக்கறிஞர்கள் கிருஷ்ணன், சீனிவாசன், தமிழ்ச்செல்வி கர்ணன் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுதாகர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் உதயநிதி பிறந்தநாள் விழா... ஒன்றிய அமைப்பாளர் திரவியம் ஏற்பாட்டில் முதியோர் இல்லத்தில் உணவு வழங்கினர்

சிவகங்கை மாவட்டம் திமுகவினர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சிவகங்கை புறநகர் அன்னை முதியோர் இல்லத்தில் காலை இனிப்பு மற்றும் சிற்றுண்டி வழங்கி சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்....

மேற்கு ஒன்றிய திமுக ஒன்றிய செயலாளர் கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை அம்பலகாரர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் திரவியம் ஏற்பாட்டில் அவைத்தலைவர் பாலுச்சாமி , ஒன்றிய பொருளாளர், அரசு ஒப்பந்ததாரர் அர. உசிலம்பட்டி பாண்டியராஜா, மாவட்ட பிரதிநிதி அரசனூர் தியாகராஜன் , மாவட்ட விவசாயத் தொழிலாளரணி துணை அமைப்பாளர், ஊராட்சி மேனாள் தலைவர் தமறாக்கிவடக்குரவி, மேற்கு ஒன்றிய ஐடி விங் அமைப்பாளர் தமறாக்கி அம்பலம் ஆகியோரது முன்னிலையில் முதியோருக்கு காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது...



இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி துணைத்தலைவர் மார்கரேட் கமலா பத்தினாதன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஒமேகா திலகவதி கண்ணன், ஒன்றியக்கழக

நிர்வாகிகள் மீனாட்சிபுரம் ஊராட்சி மேனாள் துணைத்தலைவர் தமிழரசன், சமயத்துரை, பேச்சிமுத்து, மலைச்சாமி, போதிராஜா, காஞ்சிவனம், சம்பத் குமார், சந்தோஷ்குமார், கருணாகரன், மணிகண்டன், பொன்னுச்சாமி உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மேயர் ஜெகன் பெரியசாமி கேக் வெட்டி கொண்டாடினர்



தூத்துக்குடி மாநில திமுக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதிஸ்டாலின் பிறந்தநாளையொட்டி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைஅமைச்சர் கீதாஜீவன் வழிகாட்டுதலின்படி பழைய அண்ணா பேருந்துநிலையம் அருகில் நடைபெற்ற விழாவிற்கு மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் தலைமை வகித்தார். மண்டலத்தலைவர் கலைச்செல்வி, வட்டச்செயலாளர்கதிரேசன்ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேயர் ஜெகன் பெரியசாமிகேக்வெட்டிபொதுமக்கள் ஆட்டோ தொழிலாளர்கள் தூய்மை பணியாளர்கள் ஆகியோருக்கு வழங்கினார். விழாவில் மாநில மீனவரணி துணை செயலாளர் புளோ ரன்ஸ், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணை மேயர் ஜெனிட்டா, மண்டலத்தலைவர்கள் வக்கீல்பாலகுருசுவாமி, நிர்மல்ராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் பழனி, அருண்குமார், அந்தோணிஸ்டாலின், மாநகர அணி நிர்வா கிகள் கிறி ஸ்டோபர், ஆனந்தசேகர், ரவிந்திரன், கவுன்சிலர்கள் சரவணக்குமார், போல்பேட்டைபகுதி பிரதிநிதி பிரபாகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (26.11.2025) அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடு, ஆவின் பால்பண்ணை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் திருவுருவச் சிலையை திறந்து வைத்து அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.இவ்விழாவில்,பொதுப்பணித்துறைஅமைச்சர்எ.வ.வேலு,வீட்டுவசதி,மதுவிலக்குமற்றும்ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சீனாவில் ரயில் மோதி தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழப்பு



பீஜிங்: சீனாவில் சோதனை ஓட்டமாக இயக்கப்பட்ட ரயில் மோதியதில் தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உலகின் மிகப்பெரிய ரயில்வே கட்டமைப்புகளை கொண்ட நாடாக சீனா திகழ்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு ரயில்விபத்துகளில்ஏராளமானோர் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், யுன்னான் மாகாணத்தில் உள்ள குன்மிங் என்ற இடத்தில் இன்று(நவ.,27) ரயில் சோதனை ஓட்டம் நடந்தது. தண்டவாளத்தில் ஊழியர்கள் நின்று கொண்டிருந்தனர். அப்போது சோதனை ரயில் அவர்கள் மீது மோதியது. இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவலறிந்ததும் மீட்புப்படையினர் சம்பவ இடத்துக்கு வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹாங்காங்கில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீவிபத்தில் 55 பேர் உயிரிழந்தநிலையில்,அடுத்ததாக ரயில் விபத்தில் 11 பேர் உயிரிழந்தது அந்நாட்டில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஊழல் வழக்குகளில் ஷேக் ஹசீனாவுக்கு சிறை: வங்கதேச நீதிமன்றம் தீர்ப்பு



டாக்கா: அரசு திட்டங்களுக்குநிலம்ஒதுக்கியதில் முறைகேடு நடந்ததாக தொடரப்பட்ட 3 வழக்குகளில் வங்கதேச முன்னாள் பிரதமர்ஷேக் ஹசீனாவுக்கு 21 ஆண்டு சிறைதண்டனைவிதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்தாண்டு வங்கதேசத்தில் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தில் பெரும் வன்முறை வெடித்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையை தொடர்ந்து பிரதமர் பதவியை ராஜினாமா செய்த ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அந்நாட்டில் புதிய அரசு அமைந்த உடன் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலைஊழல் செய்தது, உட்பட ஏராளமானவழக்குபதிவுசெய்யப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சுட்டுக் கொல்ல உத்தரவிட்டதாககூறிதொடர்ந்த வழக்கில் அவருக்கு மரணதண்டனைவிதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆறு மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் வங்கதேசத்தில் புர்பச்சல் புதிய நகர் திட்டத்தில், அவருக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் விதிமுறைகளை மீறி நிலம் ஒதுக்கப்பட்டதாகவும், அதில் ஊழல் நடந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த டாக்கா சிறப்பு நீதிமன்ற நீதிபதி முகமது அப்துல்லா அல் மமும், 3 வழக்குகளிலும் ஷேக் ஹசீனா குற்றவாளி என அறிவித்தார். மேலும் அவருக்கு ஒவ்வொரு வழக்கிலும்தலா7 ஆண்டுகள் என மொத்தம் 21 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார். அவரின் மகன் சஜீப் வாசீத்துக்கும், மகள் சயிமாவாஜீத்துக்கும் தலா 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

# நீர்மின் நிலையத்தை பாதுகாத்த வீரர்களுக்கு விருது

புதுடெல்லி: ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த மே 7ம் தேதி ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை இந்தியா மேற்கொண்டது.

இதையடுத்து, எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள காஷ்மீரின் பாராமுல்லா மாவட்டத்தில் ஜீலம் நதியை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள உரி நீர் மின் நிலையத்தை குறிவைத்தும் பாகிஸ்தான் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சிஐஎஸ்எப்வீரர்கள் பாகிஸ்தான் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தினர்.



இதனால் அந்த அணை தப்பித்தது. பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போதுபாதுகாப்பு பணியில் ஈடுபட்ட 19 சிஐஎஸ்எப் அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு, டெல்லியில் உள்ள சிஐஎஸ்எப் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் விருதுகள் வழங்கப்பட்டன.

# சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஒரே ஆண்டில் 2.2 லட்சம் ஹெச்.1பி விசா வழங்கி மோசடி



சென்னை: சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஒரே ஆண்டில் 2.2 லட்சம் ஹெச்.1பி விசாக்கள் வழங்கப்பட்டதில் மோசடி நடந்திருப்பதாக அமெரிக்க எம்பியும், பொருளாதார நிபுணருமான டேவ் பிராட் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக, பாட்காஸ்ட் நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது: ஓராண்டில் மொத்தமாகவே 85 ஆயிரம் பேருக்கு தான் ஹெச்.1பி விசா வழங்கவேண்டும் என்ற சட்டவிதிகள் உள்ளன.

ஆனால், இந்தியாவில் உள்ள சென்னையில் இயங்கும் அமெரிக்க தூதரகத்தில் மட்டுமே கடந்த ஆண்டில் 2.20 லட்சம் விசாக்கள் வழங்கப்பட்டு உள்ளது.

இது அனுமதிக்கப்பட்ட வரம்பைக் காட்டிலும் 2.5 மடங்கு அதிகமாகும். இந்தியாவில் ஹெச்.1பி விசா வழங்குவதன் பின்னணியில் மிகப்பெரிய மோசடியே நடக்கிறது. இதை ஒரு தொழிலாகவே செய்கின்றனர். இதேபோல், சென்னை தூதரகத்தில் 2.20 லட்சம் ஹெச்.1பி விசா வழங்கப்பட்டது போலவே ஊழியர்கள் தங்களது துணையை உடன்அழைத்துச்செல்ல 1.40 லட்சம் ஹெச்.4 விசாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த மோசடிகள் எப்படி சாத்தியமானது என்பது புரியவில்லை.இவ்வாறு அவர் பேசினார்.

இது தொடர்பாக முன்னாள் தூதரக அதிகாரி மஹ்வாஷ் சித்திக் கூறுகையில், "இந்தியாவில் இருந்து வரக்கூடிய 80 சதவீதம் ஹெச்.1பி விசாவின் விண்ணப்பங்கள் போலியானவை. சிலர் நேர்காணலில் கூட கலந்து கொள்ளாமல் மோசடி விசா பெறுகின்றனர். இந்தியாவில் மோசடியும், லஞ்சமும் சர்வ சாதாரணமாகிவிட்டது. ஹைதராபாத்தில் இருந்து போலியாக ஹெச்.1பி விசா பெற்றுக் கொடுக்கவே தனித்தனி நெட்வொர்க் இயங்கி வருகின்றன. என்று தெரிவித்தார்.

# ஜம்மு காஷ்மீரில் கடும் குளிர் பள்ளிகளுக்கு பிப்ரவரி வரை விடுமுறை



ஸ்ரீநகர்: ஜம்மு-காஷ்மீரில் கடந்த ஒரு வாரமாக கடும் குளிர் நிலவி வருவதால் பள்ளிகளுக்கு வரும் பிப்ரவரி 28ம் தேதி வரை குளிர்கால விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீரில்கடந்தஒருவாரமாக கடும் குளிர் பொதுமக்களை வாட்டி வதைத்து வருகிறது. இதனால் பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். குறிப்பாக குழந்தைகள், பெரியவர்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். நகரில் கடந்த நேற்று முன்தினம் குறைந்தபட்ச வெப்பநிலை மைனஸ் 3 டிகிரி செல்சியசாகபதிவானது. இந்நிலையில் ஜம்முவின் குளிர் மண்டலம் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் குளிர்கால விடுமுறைக்கான அறிவிப்பை பள்ளி கல்வித் துறை வெளியிட்டுள்ளது.

நர்சரி மற்றும் கேஜி வகுப்புகளுக்கு நேற்று முதல் வரும் பிப்ரவரி 28 வரையிலும் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை டிசம்பர் 1 முதல் பிப்ரவரி 28ம் தேதி வரையிலும் 9 மற்றும் 10ம் வகுப்புகளுக்கு டிசம்பர் 11 முதல் பிப்ரவரி 22ம் தேதி வரையிலும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி விடுமுறை காலத்தில் ஆசிரியர்கள் எந்தவொரு கல்வி பணிக்கும் தயாராக இருக்க வேண்டும்,பள்ளியை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வரும் பிப்ரவரி 20ம் தேதி முதல் வர வேண்டும் என்றும் இந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# படிகட்டில் பயணம் செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்: தெற்கு ரயில்வே எச்சரிக்கை!



சென்னை புறநகர் மற்றும் MRTS ரயில்களில் படிக்கட்டில் பயணம் அல்லது சாகசங்களில் ஈடுபட்டால் ரயில்வே சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை வழங்கப்படும் என தெற்கு ரயில்வே எச்சரிக்கை விடுத்துள்ளது. ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்பு குறித்த உதவிகளுக்கு ரயில்வே உதவி எண் 139 ஐ தொடர்பு கொள்ள பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.